செ.வெ.எண்: 34-2020 நாள்:24.04.2020

**விழுப்புரம் மாவட்டம் வானூர், கோலியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் அரகண்டநல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் தூய்மை பணியாளர்களுக்கு அரிசி, அத்தியாவசிய மளிகை பொருட்கள், வேட்டி மற்றும் சேலைகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

இன்று (24.04.2020) விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் 375 தூய்மை பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும், கோலியனூர் வட்டார அலுவலகத்தில் பணிபுரியும் 260 தூய்மைபணியாளர்களுக்கும் மற்றும் அரகண்டநல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் 37 தூய்மை பணியாளர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் டெங்கு மஸ்தூர்கள் என மொத்தம் 672 நபர்களுக்கு அன்றாட தேவைகளுக்கான அரிசி, அத்தியாவசிய மளிகை பொருட்கள், வேட்டி மற்றும் சேலை, காய்கறிகள், குழந்தைகளுக்கு தேவையான தின்பண்டங்கள், பாதுகாப்பு கவசங்களான கையுறை, முககவசம், முழு உடற்பாதுகாப்பு கவசம் உள்ளிட்டவைகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வினில் மாவட்ட ஆட்சத்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்